# True Disciple

# உண்மை சீஷன்

January - March 2022 ஜனவரி - மார்ச்

**A Quarterly News Bulletin of City Revival AG Church**

## கர்த்தர் நன்மையானதைத் தருவார்

## *The LORD will indeed give what is good.*

சங்கீதம் 85:12



# கர்த்தர் நன்மையானதைத் தருவார். சங். 85:12

– பாஸ்டர். **ஜெரி டேனியல்**

*கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள விசுவாசிகள் அனைவருக்கும்*
*அன்பின் வாழ்த்துக்கள்!*

இந்த புதிய ஆண்டை காண செய்த தேவனை துதிப்போம். "கர்த்தர் நன்மையானதைத் தருவார்" என்ற வாக்குத்தத்தத்தை தேவன் நமது சபைக்கு இந்த ஆண்டு தந்திருக்கிறார். நம்முடைய தேவன் நல்லவரும் நன்மை செய்கிறவருமாயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது (சங். 119:68). ஆம், நம்முடைய நல்ல தேவன் நமக்கு நன்மைகள் தருகிறவர் (சங். 85:12; யாக். 1:17; மத். 7:11). நமக்கு நன்மை உண்டாக நம்மை நினைத்தருளுகிறவர் (நெகே. 5:19; 13:31). நன்மைகளினால் நம்மை திருப்தியாக்குகிறவர் (சங். 103:5; எரே. 31:14). அவர் இந்த ஆண்டை நன்மையினால் முடிசூட்டி உங்களை ஆசீர்வதிப்பார் (சங். 65:11).

## கர்த்தர் அருளும் நன்மைகள்

நன்மையான எந்த ஒரு ஆசீர்வாதமும் பரத்திலிருந்து வருகிறது என்று வேதம் கூறுகிறது (யாக். 1:17). தேவன் நமக்கு ஆவிக்குரிய, ஞான நன்மைகளையும், சரீர நன்மைகளையும் தந்தருளுவார் (ரோமர் 15:27).

### 1. தேவைகளை அருளும் நன்மை

நாம் ஆராதிக்கும் தேவன் நம்முடைய தேவைகளை சந்திக்கிறவர். எரேமியா 31:12-14, 'அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சை, எண்ணெய், ஆட்டுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்.... என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.' இந்த உலக வாழ்க்கையிலே நமது தேவைகள் அதிகரித்து வருவதை அறிவோம். இதைச் சந்திப்பதற்கு மிகுதியாக பாடுபடுகிறோம். குறைவுகள் வரும்போது சஞ்சலத்தோடு கவலையோடு வாழ்கிறோம். ஏன் எனக்கு இந்தக் கஷ்டம்? ஏன் எனக்கு இந்தப்பாடுகள் என்று கண்ணீர் சிந்துகிற மக்கள் ஏராளம் உண்டு. பிரியமானவர்களே, நன்மைகளை அருளும் கர்த்தர் இன்றும் ஜீவிக்கிறார். அவர் மாறாதவர். அவர் உங்கள் தேவைகளை அனைத்தையும் நிச்சயம் சந்திப்பார்.

### 2. பாதுகாக்கும் நன்மை

நம்முடைய தேவன் நம்மை தீயக் காரியங்களுக்கும் ஆபத்தான சூழ்நிலைகளுக்கும் விலக்கிப் பாதுகாக்கிறவர். சங்கீதம் 31:19, 20 கூறுகிறது,'உமக்கு பயந்து உம்மை நம்புகிறவர்களுக்கு நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்தில் ஒளித்து வைத்து காப்பாற்றுகிறீர்'! நம்முடைய தேவன் நம்மை பாதுகாக்கிறவர். எப்படி பாதுகாக்கிறார்? நம்மை மறைத்து, விலக்கி, ஒளித்து வைத்து பாதுகாக்கிறவர் என்று மேலுள்ள வசனம் கூறுகிறது. எத்தனை அருமை! ஆம் அருமையானவர்களே, இந்த ஆண்டு தேவன் உங்களை மனுஷீக தந்திரங்களுக்கும் சத்துருவின் திட்டங்களுக்கும் மற்றும் சகலவித பொல்லாப்புகளுக்கும் வியாதிகளுக்கும் உங்களை மறைத்து, விலக்கிப் பாதுகாப்பார்!

### 3. ஆலயத்தின் நன்மை

கர்த்தருடைய ஆலயத்தையும் அவர் சமூகத்தையும் நேசித்த மனிதனாகிய தாவீது கூறுகிறார், ‘உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்’ (சங். 65:4). நாம் ஆலயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, தவறாமல் வாஞ்சையுடன் செல்லும் போது தேவன் அங்குள்ள சகல நல் ஆசீர்வாதங்களையும் தந்து நம்மை நிறைவாக ஆசீர்வதிக்கிறார். நாம் ஆலயத்திற்கு செல்லும் போது, அவர் தமது வழிகளை நமக்கு போதிக்கிறார் (ஏசாயா 2:3). ஆலயத்தில் போதிக்கப்படுகிற வசனங்கள் நமக்கு எச்சரிப்பையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வருகிறது. கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள் என சங்கீதம் 92:13 ல் வாசிக்கிறோம்.

தனது இக்கட்டின் மத்தியிலும் ஆலயத்தை கனம்பண்ணி அங்கு தவறாமல் சென்ற 18 வருடமாக கூனியாக இருந்த ஸ்திரியை கர்த்தர் சுகமாக்கி, நிமிர்ந்து நடக்கப்பண்ணினார் (லூக்கா 13:10-13). ஆலயத்தில் வந்து பொருத்தனையோடு ஜெபித்த அன்னாளின் ஜெபத்தை கர்த்தர் கேட்டு, பிள்ளையில்லாத குறைவை நீக்கி, துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார் (1 சாமு. 1:9-20). இன்னும் பல ஆவிக்குரிய, சரீர நன்மைகள் உண்டு. நாம் ஆலய ஆராதனையிலே வாஞ்சையோடு பங்குபெறும்போது, ஆலயத்தின் நன்மையால் நம்மை நிறைவாக்குவார்.

## நன்மைகளைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?

தேவன் நமக்கு அருளும் நன்மைகள் ஏராளமானவைகள். இரட்சிப்பின் சந்தோஷம், சமாதானம், ஆவியின் அபிஷேகம், ஆவியின் கனிகள், வரங்கள் போன்ற ஆவிக்குரிய நன்மைகளையும், நல்ல குடும்பம், நல்ல வேலை, நல்ல வருமானம், நல்ல உறவுகள், நல்ல சரீர சுகம் போன்ற சரீர நன்மைகளையும் தேவன் தர ஆயத்தமாயிருக்கிறார். அவைகளை நாம் பெற்றுக்கொள்ள சில நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று வேதம் நமக்கு கூறுகிறது.

### 1. கர்த்தரைத் தேட வேண்டும்

‘சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது’ என வேதம் கூறுகிறது (சங். 34:10). யாரெல்லாம் கர்த்தரைத் தேடுகிறார்களோ அவர்களுக்கு அவர் நன்மையை அருளுகிறார். கர்த்தரைத் தேடுதல் என்பது அவரோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொள்ளுதலாகும் (சங். 63:1). மேலும் கர்த்தரைத் தேடுதல் என்பது தேவனை நம்முடைய வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் இணைத்துக்கொண்டு அவருடைய சித்தம் செய்ய அர்ப்பணித்தலாகும். ஆகவே இந்த ஆண்டு இதுவரை இல்லாத அளவில் கர்த்தரைத் தேடுங்கள். தேவனோடுள்ள உறவில் வளருங்கள். கர்த்தரை முழு இருதயத்தோடு தேடுங்கள். முழு பெலத்தோடுதேடுங்கள். முதலாவது தேடுங்கள். நித்தமும் தேடுங்கள் (உபா. 4:29; சங். 105:4; மத். 6:33). இவ்வாறு தேடும்போது கர்த்தர் அருளும் நன்மைகளைப் பெற்று ஆசீர்வாதமாக வாழ முடியும்!

### 2. உத்தமமாய் நடக்க வேண்டும்

‘உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு கர்த்தர் நன்மையை வழங்காதிரார்’ என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது (சங். 84:11). மேலும் ‘.... செம்மையாய் நடக்கிறவர்களுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ?’ என்று கர்த்தர் சொல்லுகிறார் (மீகா 2:7). தேவன் நம் வாழ்வில் உத்தமத்தையும் பரிசுத்தத்தையும் விரும்புகிறார். நம்முடைய இருதயத்தையும் வாழ்க்கையையும் கர்த்தருக்கு நேராக செம்மையாக்குவோம். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை நம்மை விட்டு முற்றிலும் அகற்றுங்கள். பரிசுத்தமாய் வாழ தானியேலைப் போல இந்த ஆண்டு நல்ல தீர்மானங்களை எடுங்கள் (தானி. 1:8). வீட்டிலும், வேலை

ஸ்தலத்திலும், மற்றவர்கள் முன்பும் சாட்சியாக வாழ அர்ப்பணியுங்கள். வார்த்தையிலும் நடக்கையிலும் எப்பொழுதும் பரிசுத்தமாயிருங்கள் (1 பேதுரு 1:15,16). எப்பொழுதும் கர்த்தருக்கு பயந்திருங்கள். கர்த்தருக்கு பயந்து பொல்லாப்பான காரியத்தை செய்ய மறுத்த எபிரேய மருத்துவச்சிகளுக்கு தேவன் நன்மை செய்தார். அவர்களுடைய குடும்பங்களை தழைக்கும்படி செய்தார் (யாத். 1:15-21). கர்த்தருடைய முகம் செம்மையானவர்களை நோக்கியிருக்கிறது (சங். 11:7). அப்படிப்பட்டவர்களுக்கு அவர் நிச்சயம் நன்மையைத் தருவார். உத்தமமாய் நடந்த காலேப்பும் யோசுவாவும் கர்த்தர் வாக்குப்பண்ணின நன்மைகளை சுதந்தரித்துக் கொண்டார்கள் என்று வேதம் கூறுகிறது (யோசுவா 14:8,9).

### 3. நன்மைகளைப் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள்

'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?' என்று மத்தேயு 7:11ல் வாசிக்கிறோம். நம்முடைய தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். ஜெபித்த தாவீதுக்கு கர்த்தர் நன்மை செய்தார் (சங். 13:3-6). ஜெபித்த சாலமோனுக்கு ஞானத்தை கொடுத்தார். ஜெபித்த அன்னாளுக்கு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார். கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் என்று இயேசு சொன்னார் (யோவான் 16:24). ஆகவே ஜெபியுங்கள். ஜெபத்தின் மூலமாக தேவன் உங்களுக்காக இந்த ஆண்டு வைத்திருக்கிற நன்மைகளை நிறைவாக பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த சில புள்ளி விபரங்கள்

1. பரிசுத்த வேதாகமத்தில் (39+27) 66 ஆகமங்கள் உண்டு.
2. முழு வேதாகமத்திலும் 1189 (929 + 260) அதிகாரங்களும் 31, 102 (23, 145 + 7957 வசனங்களும் உண்டு.
3. வேதாகமம் கி.பி.1227-ம் ஆண்டு ஸ்டீபன் லேங்டன் என்பவரால் அதிகாரங்களாக பிரிக்கப்பட்டது. மேலும் பழைய ஏற்பாட்டை கி.பி.1448-ம் ஆண்டு நேதன் என்பவர் வசனங்களாகப் பிரித்தார். ராபர்ட் ஸ்டபனஸ் என்பவர் புதிய ஏற்பாட்டை கி.பி.1555-ம் ஆண்டு வசனங்களாகப் பிரித்தார்.
4. வேதாகமத்தில் நீண்ட அதிகாரம் சங்கீதம் 119; சிறிய அதிகாரம் சங்கீதம் 117. நீண்ட புத்தகம் - எரேமியா; சிறிய புத்தகம் - 3 யோவான்.
5. வேதாகமம் 1600 வருட காலக் கட்டத்தில் (கி.மு.1500 - கி.பி.100) 40 எழுத்தாளர்களால் எழுதப்பட்டது.
6. பரிசுத்த வேதாகமம் கி.பி.1714ம் ஆண்டு சீகன்பால்க் என்றும் டேனிஷ் மிஷினரியால் தமிழில் மொழியாக்கப்பட்டு அச்சிடப்பட்டது. இந்தியாவில் தமிழ் மொழியில்தான் வேதாகமம் முதலாவது மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டது.
7. முழு வேதாகமும் 704 மொழிகளிலும், புதிய ஏற்பாடு மட்டும் 1551 மொழிகளிலும் இதுவரை (செப்.2020) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
8. கின்னஸ் சாதனைப் புத்தகத்தின்படி உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதும், உலகிலேயே அதிகமாக விற்பனை செய்யப்பட்டதுமான புத்தகம், பரிசுத்த வேதாகமம்.
9. வேதத்தைத் தொடர்ந்து ஒரே நேரத்தில் வாசித்தால் 72 மணிநேரத்தில் வாசித்து முடிக்கலாம். தினமும் 12 அதிகாரங்கள் வாசித்தால் 3 மாதத்தில் வாசிக்க முடியும். தினமும் 6 அதிகாரம் வாசித்தால் 6 மாதத்திலும், 3 அதிகாரம் வாசித்தால் ஒரு வருடத்திலும் வாசித்து முடிக்கலாம்.

வேதத்தை நேசியுங்கள்! வாசியுங்கள்! அப்பியாசியுங்கள்!

**கர்த்தருடைய வேதத்தில் இரவும், பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்!**

# 2022 இலக்குடன் தொடங்குங்கள் இலக்கை நோக்கித் தொடருங்கள்

பரிசுத்த பவுல், "நாம் நிச்சயமில்லாதவர்களாக ஓடக்கூடாது" (1 கொரி. 9:26) என்றும், "இலக்கை நோக்கித் தொடர வேண்டும்" எனவும் (பிலிப்பு. 3:13, 14) நமக்கு அறிவுறுத்துகிறார். நாம் இந்த புத்தாண்டில் (2022) நிச்சயமான இலக்குகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நாம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தேறுகிறது அனைவருக்கும் பிரத்தியட்சமாய் காணப்படுவது அவசியம் (1 தீமோ. 4:15). இந்த 2022ம் ஆண்டில் நீங்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கும், அடைவதற்கும் ஏற்ற சில பயனுள்ள இலக்குகளைக் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 5 அத்தியாவசியமான இலக்குகள் :

### 1. விசுவாசம் (FAITH)

- நான் அனுதினமும் ஒரு மணி நேரமாவது தேவனோடு கூட செலவிடுவேன் (மத். 6:33).
- இந்த வருடத்தில் ஒரு முறையாவது வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடிப்பேன்.
- அனுதினமும் ஒரு வேத வசனத்தை மனனம் செய்வேன்
- மாதம் ஒருமுறை ஒரே ஒரு ஆவிக்குரிய புத்தகத்தையாவது வாசிப்பேன்.
- ஆலயத்திற்கு தவறாமல் செல்வேன்; மட்டுமின்றி சரியான நேரத்திற்கும் செல்வேன்.
- சபையில் நடைபெறும் பற்பல ஊழியங்களில் ஏதாவது ஒன்றிலாகிலும் பங்கெடுத்து, உண்மையாய் ஊழியம் செய்வேன்.
- ஆவியின் கனிகள் என்னில் வளர்ந்து பெருக பிரயாசம் எடுப்பேன்.
- ஒரு நாளில் அதிகமான நேரம் சமூக வலைத்தளங்களில் நேரத்தை செலவிட மாட்டேன்.

### 2. குடும்பம் (FAMILY)

- நான் குடும்ப ஜெபத்தை தினமும் கடைப்பிடிப்பேன்.
- எனது குடும்ப உறவுகளை வலுப்படுத்துவேன் (குடும்பமாக வெளியே செல்லுதல், பேசி மகிழ்தல்...)
- ஒரு நாளில் ஒரு முறையாவது எனது குடும்பத்தினருடன் இணைந்து உணவருந்துவேன்.
- எனது குடும்பத்தை சேர்ந்தவர்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்வேன்.
- என் குடும்பத்தினர் மீது எனக்குள்ள அன்பை செயல்களினாலே வெளிப்படுத்துவேன்.
- மன்னிப்பை அனுதினமும் என் வாழ்வில் அப்பியாசிப்பேன்.

### 3. பொருளாதாரம் (FINANCE)

- நான் தசமபாகத்தை உண்மையாகச் செலுத்துவேன்.
- சோம்பேறியாக இருக்காமல் கடினமாக உழைப்பேன்.
- கடன் வாங்க மாட்டேன்; வாங்கிய கடன்களை விரைவில் திருப்பி செலுத்துவேன்.
- எனது வருமானத்திற்குள் திருப்தியாக வாழுவேன்.
- ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வேன்.
- வருமானத்தில் ஒரு சிறு பகுதியை முறையாக சேமித்து வைப்பேன்.
- உற்சாக மனதுடனே கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துவேன்.

## 4. ஆரோக்கியம்/உடல் நலம் (FITNESS) :

- எனது உடல் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயம் என்பதை உணர்ந்து செயல்படுவேன்
- தினமும் பத்திலிருந்து முப்பது நிமிடங்கள் வரை நடைபயிற்சி / உடற்பயிற்சி மேற்கொள்வேன்.
- நிறைய தண்ணீர் அருந்துவேன்.
- ஆரோக்கியமற்ற, துரித உணவுகளை (Fast Food) உண்ணமாட்டேன்.
- எனது உடலின் சர்க்கரை, கொழுப்பு, இரத்த அழுத்தம் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆவனச் செய்வேன்.
- எனது அதிகப்படியான உடல் எடையைக் குறைத்து, என் உயரத்திற்கும், வயதிற்கும் ஏற்ற உடல் எடையைப் பெற அயராது முயற்சிப்பேன்.

## 5. நட்பு (FRIENDSHIP)

- நான் இவ்வாண்டில் புதியதாக பத்து நண்பர்களையாவது சம்பாதிப்பேன்.
- தினமும் குறைந்தபட்சம் ஒருவரின் சந்தோஷத்திற்கு நான் காரணமாக இருப்பேன்.
- பிறரின் தகுதியான நற்செயல்களை பாராட்டுவேன்; உற்சாகப்படுத்துவேன்.
- வம்பு பேசமாட்டேன்; புறங்கூறமாட்டேன்; உள்ளத்தில் பகையை மறைத்து வைக்க மாட்டேன்.
- என் நாவை அடக்கி, வார்த்தைகளை கவனமாகக் கையாளுவேன்.
- இந்த ஆண்டு இரண்டு பேரையாவது இயேசுவுக்காக ஆதாயம் செய்து ஞானஸ்நானத்திற்குள் வழிநடத்துவேன்.

இந்த இலக்குகளை நீங்கள் அடைய கர்த்தர் தாமே உங்களை பெலப்படுத்துவாராக; உங்களை ஆசீர்வதிப்பாராக!

## நாம் தாங்கும் மிஷினரிகளுக்காக ஜெபியுங்கள்
## Pray for the Missionaries we Support



மிஷனரி. **சூரிய நாராயண தாபா** - திருமதி. **ரஞ்சிதா லாபாங் தாபா**
Missionary. **Surya Narayana Thapa** - Mrs. **Ranjitha Lapang Thapa**
(அஸ்ஸாம் - Assam)



மிஷனரி. **யுவராஜ்** - திருமதி. **ஜெய்ஸ்ரீ**
Missionary. **Yuvaraj** - Mrs. **Jaishree**
(ராஜஸ்தான் - Rajastan)



மிஷனரி. **இயேசு பிரகாஷ்** - திருமதி. **சுனந்தா பெல்லி**
Missionary. **Yesu Prakash** - Mrs. **Sunanda Belly**
(மஹாராஷ்திரா - Maharasthra)



மிஷனரி. **ஜோசுவா பாக்**- திருமதி. **சில்பா பாக்**
Missionary. **Joshua Bagh** - Mrs. **Silpa Bagh**
(ஒடிசா - Odissa)

# உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் நிலையை சோதித்தறியுங்கள்!!

| ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை | ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய வாழ்க்கை |
|---|---|
| ஊக்கமான ஜெபம் | மந்தமான ஜெபம் |
| வேதம் வாசித்தல் இனிமையானது | ஆர்வமில்லாத வேத வாசிப்பு |
| கர்த்தரில் முழுமையான நம்பிக்கை கொண்டிருத்தல் | பதட்டத்துடனும், சந்தேகத்துடனும் இருத்தல் |
| மற்றெல்லாவற்றையும் விட கர்த்தரை சேவித்தல் | கர்த்தரைவிட இவ்வுலக காரியங்களை அதிகமாக நேசித்தல் |
| பாவத்தை எதிர்த்தலும் வெறுத்தலும் | பாவத்தோடு சமரசம் செய்தல் |
| அனைத்திலும் தேவனை மகிமை அடையச் செய்தல் | அனைத்திலும் தற்பெருமையைத் தேடுதல் |
| இருதயத்தில் சமாதானத்துடன் இருத்தல்<br>அனைத்திலும் நன்றி செலுத்துதல் | இருதயத்தில் கவலை கொள்ளுதல்<br>எப்பொழுதும் முறுமுறுத்தல் |
| எப்போதும் மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டிருத்தல் | எப்போதும் வருத்தத்துடனும் பெருமூச்சுடனும் இருத்தல் |
| உபத்திரவத்தில் அமைதியுடனும் பொறுமையுடனும் இருத்தல் | எளிதில் கோபம் கொள்ளுதல் |
| மற்றவர் நலத்தில் கருத்துடன் இருத்தல் | சுயநலத்தில் கருத்தாய் இருத்தல் |
| அனைத்திலும் தேவனுக்குரியதைத் தேடுதல் | எப்போதும் சுகபோக நாட்டத்துடன் இருத்தல் |
| ஆவிக்குரிய காரியங்களில் வாஞ்சையுடன் இருத்தல் | இதயத்தில் இவ்வுலக காரியங்களை இச்சித்தல் |
| பிறரைத் திடன் கொள்ளச் செய்யும் வார்த்தைகளைப் பேசுதல் | பிறரைக் குறை கூறும் வார்த்தைகளைப் பேசுதல் |
| கிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதில் மகிழ்ந்திருத்தல் | சாட்சியாய் இருக்க வல்லமை இழந்து கவலைப்படுதல் |
| கர்த்தரின் ஊழியத்திற்கு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொடுத்தல் | உற்சாகமில்லாமலும், விருப்பமற்றும் கொடுத்தல் |
| பிறர் வெற்றியடையும் போது களிகூறுதல் | பிறர் வெற்றியைப் பார்த்து பொறாமைகொள்ளுதல் |
| பிறரின் துன்பத்தில் உதவிக்கரம் நீட்டுதல் | பிறர் துன்புறும் போது கண்டு கொள்ளாமலிருத்தல் |
| மன்னித்தலை விரும்புதல் | மன்னிக்க விரும்பாமலிருத்தல் |
| குணநலனுக்கு (நல் நடத்தைக்கு) முக்கியத்துவம் அளித்தல் | உடுத்துதலுக்கு முக்கியத்துவம் அளித்தல் |
| பிற பக்தியுள்ள கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல் | உலக பிரமான நண்பர்களுடன் நட்புக் கொள்வதில் மகிழ்ச்சியடைதல் |
| கடிந்து கொள்ளுதலை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதல் | புகழ்ந்து பேசும் வார்த்தைகளை மட்டும் விரும்புதல் |
| கர்த்தரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருத்தல் | கர்த்தருடைய வருகையைக் குறித்து சிறிதும் சிந்திக்காது இருத்தல் |

# கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை

"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" ஆதி. 18:1

"உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" ஏரே. 32:17

இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார், அற்புதங்களை செய்கிறார். அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1:37). இன்று அநேகர் கிதியோனைப் போல, "கர்த்தர் எங்களோடிருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதகளெல்லாம் எங்கே?" என்று கேட்கிறார்கள் (நியாயா. 6:13). தேவ ஜனமே, நம் தேவனுடைய அற்புதம் செய்யும் வல்லமை இன்றும் மாறி போகவில்லை (எபி. 13:8; மல். 3:6). அவரை விசுவாசித்தால் உங்கள் வாழ்வில் நிச்சயம் அற்புதம் செய்வார்.

## 1. தேவனால் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றுமில்லை
## There is no PROBLEM too hard for God to solve

ஒவ்வொருவரும் வாழ்வில் கடினமான மற்றும் நெருக்கமான சூழ்நிலைகளுக்குள் கடந்தி செல்லுகிறோம். ஆனால் தேவன் நம்மோடிருந்தால் எந்த சூழ்நிலையையும் மேற்கொள்ள முடியும். பலத்தினாலும் அல்ல, பராக்கிராமத்திலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலேயே ஆகும். பெரிய பர்வதமே! நீ எம்மாத்திரம்?... நீ செருபாபேலுக்கு (தேவபிள்ளைக்கு) முன்பு சமபூமியாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சகரி. 4:6,7). நீங்கள் இன்று சந்திக்கும் "பர்வதம்" போன்ற பிரச்சனை என்ன? வியாதியா? பொருளாதார நெருக்கடியா? வேலையில், குடும்பத்தில், திருமணத்தில் பிரச்சனையா? நாளைய தினத்தை எப்படி சந்திப்பது என்று கவலையா? அப்படியால் இதை அறிந்து கொள்ளுங்கள் "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக்கா 1:37). வழியே இல்லாத இடத்தில் அவர் உங்களுக்காக வழியைத் திறப்பார் (ஏசாயா 43:19). கோணலானவைகளைச் செவ்வையாக்குவார் (ஏசாயா 45:2). திடன் கொள்ளுங்கள்! கர்த்தரை நம்புங்கள். அவர் அற்புதம் செய்வார்.

## 2. தேவனால் நிறைவேற்ற முடியாத வாக்குத்தத்தம் ஒன்றுமில்லை
## There is no PROMISE too hard for God to fulfill

நம்முடைய தேவன் தமது வார்த்தையை நிறைவேற்ற வல்லவர்(யோசுவா 23:14; 1 சாமு. 3:19; 2 நாளா. 6:10,15; நெகே. 9:8). தேவன் பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனத்தும் நிறைவேற்றாதிருப்பாரா என்று வேதம் கூறுகிறது (எண்ணா. 23:19). கர்த்தர் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வயது சென்ற நிலையிலும், பிள்ளையில்லாத அவர்களுக்கு ஒரு பிள்ளையைத் தருவேன் என்று வாக்குப்பண்ணினார் (எபி. 11:12). அவர் சொன்னபடியே நிறைவேற்றினார் (ஆதி. 21:1). ஈசாக்கின் பிறப்பு, கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற உண்மையும், வல்லமையும் உள்ளவராயிருக்கிறார் என்பதற்கு சான்றாகும். இஸ்ரவேலர்கள் கர்த்தர் தங்களுக்கு வாக்குப் பண்ணினபடியே கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டனர் (யாத். 3:8; 6:6-8). யோசுவா ஜனங்களை நோக்கி, "கர்த்தர் உங்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று" என்று கூறினான் (யோசுவா 23:14; 21:45). ஆம் கர்த்தர் தம்முடைய வாக்கை உங்கள் வாழ்வில் நிச்சயம் நிறைவேற்றுவார். தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும் (ஆபகூக் 2:3).

### 3. தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் ஒன்றுமில்லை
### There is no PRAYER too hard for God to answer

நாம் சேவிக்கிற தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவர் (யோவான் 14:14). என்னை நோக்கி கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு மறு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று கர்த்தர் சொல்கிறார் (ஏரே. 33:3). தேவ மனிதர்கள் ஜெபித்த போது கர்த்தர் ஆச்சரியமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆபிரகாம் தேவனை நோக்கி ஜெபித்தபொழுது தேவன் அபிமெலெக்கையும் அவன் மனைவியையும் குணமாக்கி, பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார் (ஆதி. 20:17). யோசுவா ஜெபித்தபோது, சூரியனை தரித்து நிற்க செய்தார் (யோசுவா 10:12). எலியா ஜெபித்தபோது வானத்திலிருந்து அக்கினி இறங்கிற்று (1 இராஜா.18:36-38). பேதுரு ஜெபித்தபோது, மரித்த பெண் உயிரோடு எழும்பினாள்(அப்.9:40). தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் என்று ஒன்றும் இல்லை. நாம் அவருடைய சித்தத்தின்படி சுத்த இருதயத்தோடு வேண்டிக்கொள்ளும்போது அவர் நிச்சயம் நமக்கு பதிலளிப்பார்(1 யோவான் 3:21,22; 5:14). நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்.5:16). ஜெபியுங்கள்! அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

### 4. தேவனால் இரட்சிக்கமுடியாத நபர் ஒருவருமில்லை
### There is no PERSON too hard for God to save

இரட்சிக்ககூடாதபடி கர்த்தருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று வேதம் சொல்லுகிறது (ஏசா. 59:1, 50:2; எண். 11:23). இரட்சிக்க முடியாத நபர் என்று அவருடைய பார்வையில் ஒருவரும் இல்லை. ஒவ்வொரு நாளும் இயேசு ஆயிரக்கணக்கான நபர்களை இரட்சித்து, தம்முடைய மந்தைக்குள் சேர்த்து வருகிறார். குடிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், விபச்சாரக்காரர்கள் என பலரும் இயேசுவின் வல்லமையுள்ள இரத்தத்தினால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு வருகின்றனர். நீங்கள் யாரோ சிலருடைய இரட்சிப்பிற்காக ஜெபித்து வரலாம். ஒருவேளை அவர்கள் இன்னும் மனந்திரும்பாமல் இருக்கலாம். தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் அவர்களை இரட்சிப்பார். சகேயு, பவுல், லீதியாள் போன்றவர்களை இரட்சித்த தேவன் உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நீங்கள் ஜெபிக்கும் நபர்களையும் அவர் இரட்சிக்க வல்லமையுள்ளவர் (லூக்கா 19:9; அப். 9:1-6, 16; 14,15).

## அனுதின கிறிஸ்தவன்

**தேவன், நாம் அவரை அனுதினமும் பின்பற்றி அவருடைய வழிகளில் வாழ வேண்டும் என்று விரும்புகிறார். நாம் கீழ்க்கண்ட காரியங்களை அனுதினமும் செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது.**

1. **அனுதின ஜெபம் (அப்போஸ்தலர் 2:42; சங்கீதம் 86:3)**
2. **அனுதின வேத தியானம் (அப்போஸ்தலர் 2:47; 17:11; சங்கீதம் 1:1-2)**
3. **அனுதினத் துதி (சங்கீதம் 72:15)**
4. **அனுதினமும் சுவிசேஷம் அறிவித்தல் (அப்போஸ்தலர் 2:47, 5:42)**
5. **அனுதினமும் பரிசுத்தம், சுத்திகரிப்பு (எண்ணாகமம் 29:6; ரோமர் 12:1)**
6. **அனுதினமும் சிலுவை சுமத்தல் (லூக்கா 9:23)**
7. **அனுதினமும் புத்தி சொல்லுதல் (எபிரேயர் 3:13)**

# வனாந்திரத்தில் இஸ்ரவேலரின் அன்றாட தேவைகள்

வேதாகமத்தில் நாம் எண்ணற்ற அதிசயங்கள் அற்புதங்களைப் பற்றிக் காண்கிறோம். அவற்றுள் தலை சிறந்தது மோசேயும் இஸ்ரவேல் மக்களும் நாற்பது வருட காலங்களாக வனாந்தரத்தில் சஞ்சரித்த போது நிகழ்ந்தவைகளே. ஆனால் நாமோ அதைப்பற்றி வியந்து மகிழாமல், அதை ஏதோ ஒரு அன்றாட நிகழ்வென கருதுகிறோம். பெருந்திரளான இஸ்ரவேலரின் அன்றாட, அவசர, அத்தியாவசிய தேவைகள் எத்தனை, எத்தனையோ? சிந்தித்துபார்க்கவே மலைப்பாக இருக்கிறதல்லவா?

**உணவு :** மோசே கர்த்தருடைய ஜனங்களை அனுதினமும் போஷிக்க வேண்டியதாயிருந்தது. 25 முதல் 30 இலட்சமாகிய மக்களுக்கும், மற்றும் கால்நடைகள், பறவைகளுக்குமான அனுதின உணவு தேவை அளவிடற்கரியதாகும். பெரிய இராணுவத்தில் போர் வீரர்களுக்கு அன்றாடம் உணவு, உடை, எரிபொருள், குடிநீர் மற்றும் பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு அதிகாரியின் கணிப்பின் படி, வனாந்திரத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு மைல் நீளமுள்ள, இரண்டு சரக்கு இரயில்கள் நிரம்பத்தக்கதான உணவு தேவைப்பட்டது. அதாவது சுமார் 1500 டன் (15 இலட்சம் கிலோ கிராம்) இத்தகைய மாபெரும் தேவை கர்த்தரால் அற்புதமாக அருளப்பட்டது.

**சமையல் :** இரண்டாவதாக உணவு சமைக்கத் தேவையான எரிபொருள் (விறகு). அனுதினமும் 4000 டன் (40 இலட்சம் கிலோ கிராம்) அளவு விறகு கட்டைகள் தேவைப்பட்டன. இவைகளும் ஒரு மைல் நீளமுள்ள ஒரு சில சரக்கு இரயில்கள் கொள்ளத்தக்கதானவை.

**தண்ணீர் :** ஒரு நாளில் ஒரு நபருக்கு தேவையான தண்ணீர் சுமார் 19 லிட்டர். இதன்படி பார்த்தால், வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு, ஒரு நாளிற்கு மட்டும் குடிக்கவும், சமைக்கவும், குளிக்கவும், துவைக்கவும் ஏறக்குறைய 11 மில்லியன் கேலன் (14.6 கோடி லிட்டர்) அளவான தண்ணீர் தேவைப்பட்டிருக்க வேண்டும். இவ்வளவு தண்ணீர் சுமார் 1800 மைல் நீளமுள்ள குடிநீர் கேலன்கள் அடங்கிய சரக்கு இரயில் கொள்ளளவானது. வனாந்திரத்தில் ஏரிகள் போன்ற நீர்நிலைகள் இல்லை. ஒரு சில கிணறுகள் மட்டுமே இருந்தன. வனாந்திரம் என்றாலே வறட்சியான இடம் தானே? இப்படியிருக்க வறண்ட வனாந்திரத்தில் இவ்வளவு தண்ணீர் அவர்களுக்கு அனுதினமும் எப்படி கிடைத்தது? கர்த்தராகிய தேவனே அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்தார்.

**இடம் :** அடுத்ததாக ஒரே இரவில் இஸ்ரவேலர் அனைவரும் செங்கடலைக் கடக்க வேண்டியதாய் இருந்தது. குறுகிய வரிசையில் இருவர் பின் இருவராகக் கடக்க முயன்றிருந்தால், 800 மைல் நீளமான வரிசையில், 35 நாட்கள் இரவும், பகலுமாக செங்கடலைக் கடக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் தேவனோ 3 மைல் அகலமான அளவிற்கு செங்கடலை பிளந்து வழி உண்டாக்கினார். எனவே அவர்கள் வரிசைக்கு 5000 பேர் என்ற விகிதத்தில் ஒரே இரவில் தானே செங்கடலை கடந்து முடித்தனர். எத்தனை மாபெரும் ஆச்சரியம்.மீண்டும் ஒரு சிக்கல் இருந்தது. ஒவ்வொரு நாள் இரவும் இஸ்ரவேலர் ஓய்வெடுக்க 750 சதுர மைல் பரப்பளவிலான இடம் தேவைப்பட்டது. நினைத்து பாருங்கள்! இரவு மட்டும் இளைப்பாற இத்தனை விஸ்தாரமான இடம் தேவையாக இருந்தது!

மோசே எகிப்திலிருந்து புறப்படும் முன்பு இதையெல்லாம் யோசித்து தகுந்த முன்னேற்பாடுகள் செய்திருப்பார் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. மோசே இந்த காரியங்களுக்காக முற்றிலும் கர்த்தரையே சார்ந்து, அவரை மாத்திரமே முழுமையாக விசுவாசித்தார். மோசே விசுவாசித்தபடியே கர்த்தராகிய தேவன், உண்மையுள்ளவராய், சகல தேவைகளையும், அனுதினமும் ஈந்து, இஸ்ரவேல் மக்களை 40 வருட காலமாக, வனாந்திரத்தில் குறைவின்றி பராமரித்தார். உங்களுக்கும் செய்வார்! விசுவாசியுங்கள்!

# THE LORD WILL GIVE WHAT IS GOOD (Ps. 85:12)

**- Rev. Jerry Daniel**

Dearly beloved in Christ, Greetings! Let us praise God who brought us into this New Year. “The LORD will indeed give what is Good.” this is the promise God has given to our church for 2022. The Bible says, “The Lord is good and does what is good.” (Ps. 119:68). Yes, our good God is the one who gives us everything that is good (Ps. 85:12; James 1:17; Matt. 7:11). The Lord will remember us to give us good (Neh. 5:19; 13:31); He will satisfy us with what is good (Ps. 103:5; Jer. 31:14). He shall crown this year with goodness and bless us (Ps. 65:11).

## GOD'S GOOD GIFTS

The Bible says, “Every good and perfect gift comes from heaven above” (James 1:17). Our God will give us spiritual and material blessings (Rom. 15:27).

### 1. GOODNESS OF GOD'S PROVISION

The God we worship provides for all our needs. In Jeremiah 31:12-14, the Lord declares, “they will come…they will rejoice in the goodness of the Lord – the grain, the new wine and the oil, the young of the flocks and herds…and my people will be satisfied with my goodness.” We are aware of our increasing needs in this life. We strive hard to meet this. We live with worry and anxiety when our needs aren't met. People shed tears, lamenting “Why do I have this difficulty?! Why this suffering for me?!” Dear ones, the Lord who bestows goodness is still alive today and he is unchanging. He will definitely meet all your needs.

### 2. GOODNESS OF GOD'S PROTECTION

Our God protects us from evil and dangerous situations. The psalmist says, “How great is your goodness, which you have stored up for those who fear you, which you have wrought for those who take refuge in you, before the sons of men! You hide them in the secret place of your presence from the conspiracies of man; you keep them secretly in a shelter from the strife of tongues.”(Ps 31:19-20). Our God is our protector. How does He protect us? The above verse says that he guards, keeps, and hides to protect us. How wonderful! Yes precious ones, this year God will protect you from evil schemes of man, wicked plans of the enemy and from all kinds of harms and diseases.

### 3. GOODNESS OF GOD'S PRESENCE

David, the man who loved God's temple and his presence states, “We will be satisfied with the goodness of your house, your holy temple” (Ps. 65:4). When we give importance to church going and are eager to be in his presence, God bestows upon us every good blessing of the church. When we go to church, the

Lord teaches us His ways (Isa. 2:3). The preaching in the church bring both warning and blessing to our lives. We read in Psalms 92:13 that “those planted in the house of the LORD, they will flourish in the courts of our God.”

In spite of her crippled state for 18 years, the hunchback woman was regular to the synagogue. She went there consistently to worship the Lord and to hear God's word. One day Jesus visited there and made her walk straight(Luke 13:10-13). The Lord heard the prayer of Hannah, who came to the temple and prayed with a vow, and healed her of bareness and turned her sorrow into joy (I Sam. 1: 9-20). There are many more spiritual and physical blessings like these. When we earnestly participate in church worship, he will fill us with the goodness of the temple.

## WHAT MUST I DO TO RECEIVE THE GOOD GIFTS

God's good gifts are numerous. God is willing to give spiritual gifts such as, the joy of salvation, peace, the anointing of the Holy Spirit, the fruits and gifts of the Holy Spirit. God is also ready to give us physical blessings like, good family, good job, good income, good relationships and good health. The Bible insists that we must fulfil certain criteria to receive these blessings.

**1. Seek the Lord**

The Scripture says, “The young lion may grow weak and hungry; but those who seek the LORD lack no good thing” (Ps. 34:10). God gives good gifts to everyone who seek him. To seek the Lord means to develop an intimate relationship with Him (Ps. 63:1).Seeking the Lord also means, integrating him in all the areas of our life and dedicate to do his will. Therefore, seek the Lord more than ever before this year. Grow in your relationship with God. Seek the Lord with all your heart; with all your strength. Seek him first and seek him always(Deut. 4:29; Ps. 105:4; Matt. 6:33).When we do so, we can receive the good things of the Lord and live a blessed life!

**2. Walk Upright**

The word of the Lord says that, “no good thing does he withhold from those whose walk is blameless” (Ps. 84:11). And the Lord says “...Do not my words do good to the one whose ways are upright?” (Micah 2: 7). God desires uprightness and holiness in our lives. Let us make our hearts and lives straight before the Lord. Let us rid ourselves of things that are not pleasing to God. Make good decisions this year like Daniel to live holy (Dan. 1:8) and dedicate yourselves to live a life of witness at home, in the workplace, and before everyone. Always be holy in word and deed (I Peter 1:15-16). Always fear the Lord. God was good to the Hebrew midwives who feared the Lord and refused

to do evil. He made their families prosper (Exod. 1:15-21).The Bible says, “For the LORD is righteous, and the upright will see his face” (Ps. 11:7). God surely rewards such righteous ones. The Scripture says that, Caleb and Joshua inherited the assured good benefits of the Lord because they followed Him wholeheartedly and lived uprightly(Josh. 14:8-9).

**3. Pray to receive the Good Gifts**

We read in Matthew 7:11 that, our Father in heaven will give good gifts to those who ask him! Our God listens when we pray; and the Lord did good to David, when he prayed (Ps. 13:3-6). When Solomon prayed God gave him wisdom. When Hannah prayed he gave her a child. “Ask and you will receive, and your joy will be complete,” said Jesus (John 16:24). So pray and obtain the good gifts that the Lord has in store for you this year. GOD BLESS YOU!!!

## Some facts about the Bible

1. There are 66 books (39 + 27) in the Bible
2. There are 1189 (929 + 260) chapters and 31102 verses (23,145 + 7957) in the whole Bible.
3. The Bible was divided into chapter by Stephen Langton in BC 1227. The Old Testament was further divided into verses by Nathan in AD 1448 and New Testament by Robert Stephenus in AD 1555.
4. The longest chapter in the Bible is Psalm 119. The shortest chapter is Psalm 117. The longest book is Jeremiah and the shortest book is 3 John.
5. The bible was written by 40 author in the span of 1600 years (BC 1500 – AD 100).
6. John Wycliffe is credited with producing the first complete translation of the Bible into English in the year AD 1382. German missionary Zeiganbalg translated the Bible into Tamil in AD 1714. It is the first Biblical translation printed in an Indian language.
7. As of September 2020 the full Bible has been translated into 704 languages, the New Testament has been translated into an additional 1,551 languages and Bible portions or stories into 1,160 other languages. Thus at least some portions of the Bible have been translated into 3,415 languages.
8. According to Guinness World Records, the Bible is the best-selling book of all time. It is also the world's most translated book!
9. It takes just 72 hours to finish reading the full Bible at the normal pace. If you read 12 chapters a day, you can finish reading in 3 months. If you read 6 chapters you can finish in 6 months and if you read 3 chapters you can finish in one year.

Love the Bible! Learn the Bible! Live the Bible!

*Blessed is the man whose delight is in the law of the LORD,*
*and who meditates on his law day and night.* Psalm 1:3

# Have Goals and Pursue Them

Apostle Paul says that we shouldn't run aimlessly (1 Cor. 9:26) and we should a goal and press toward that (Phil. 3:13, 14). The believers must have definite goals for 2022. Our progress in all aspects of life must be evident to all (1 Tim. 4:15). May I give you a few examples of the kind of goals we must have for 2022.

**FAITH**

- I will spend at least one hour every day with God. Matt. 6:33
- I will memorize one verse every day
- I will complete reading the Bible once this year.
- I will read at least one spiritual book every month
- I will come to church regularly and on time.
- I will participate in church ministries and serve in the body of Christ.
- I will strive to grow in the fruit of the spirit.
- I will not spend more time in social media.

**FAMILY**

- I will have family altar daily
- I will strengthen my family relationship (going for outing, meals)
- I will eat at least one meal together as a family.
- I will win the family members for Christ
- I will love my family members in action
- I will practice forgiveness.

**FINANCE**

- I will give my tithes faithfully
- I will not be lazy but work hard
- I will not borrow any longer and settle my debts quickly
- I will live a contented life within my income
- I will help the poor and the needy
- I will save a small portion of my income systematically
- I will gladly give my offerings to God

**FITNESS**

- I will treat my body as the temple of the Holy Spirit
- I will walk 10-30 minutes daily
- I will drink plenty of water
- I will eat no junk or fast food
- I will reduce my cholesterol, sugar level
- I will take sincere efforts to reduce my excess weight to suit my height & age

**FRIENDSHIP**

- I will make at least 10 new friends this year
- I will make at least 3 people smile everyday
- I will encourage/appreciate someone who deserve it
- I will not gossip/backbite/harbour any grudge.
- I will keep a tight rein on my tongue
- I will win at least 2 souls this year and lead them to baptism

# CHECK YOUR SPIRITUAL TEMPERATURE

| HEALTHY SPIRITUAL LIFE | UNHEALTHY SPIRITUAL LIFE |
|---|---|
| Fervent in prayer | Lethargic in prayer |
| Bible reading tasteful | Bible reading insipid |
| Fully trusting | Anxious and doubting |
| Loving God more than everything | Loving worldly things more than God |
| Resisting and hating sin | Compromising with sin |
| Giving God the glory in all things | Seeking self-glory in everything |
| Fully at peace | Much worrying |
| Giving thanks in all | Much murmuring |
| Always happy and singing | Always sad and sighing |
| Peaceful and patient in trouble | Easily provoked to anger |
| Much consideration of others | Much consideration of self |
| Seeking God's in all things | Seeking men's pleasure in all things |
| Yearning for spiritual things in the heart | Coveting earthly things in the heart |
| Speaking words that edify others | Speaking words that criticise others |
| Happy to witness for Christ | No power to witness |
| Cheerful to give to God's work | Stingy and unwilling to give |
| Rejoicing in other's good success | Jealous of others' good success |
| A helping hand to those in trouble | Nonchalant at other's misfortune |
| Willing to forgive others | Not willing to forgive others |
| Character first | Clothing first |
| Happy to keep close to devout Christian | Happy in the company of worldly friends |
| Happy to hear faithful admonitions | Happy to hear words of flattery |
| Eagerly hoping for the Lord's return | No thought of things touching on the Lord's return |

# NOTHING IS TOO HARD FOR THE LORD

***"Is anything too hard for the Lord?" (Gen. 18:14)***
***"There is nothing too hard for you." (Jer.32:17)***

JESUS CHRIST is still alive and performing miracles even today. There is nothing too hard for him to do. Many today are despondent like Gideon and ask the question, `If God is with us, why all this has happened to us? Where are all His miracles that our fathers told us about? I am writing this to encourage you that our Lord's power to work miracles has not changed (Heb. 13:8; Mal. 3:6) and he is willing to do amazing things in your life if only you believe in Him.

**1. THERE IS NO <u>PROBLEM</u> TOO HARD FOR GOD TO SOLVE.**

Everyone gets into tough and tight situations in life. But with God we can overcome and surmount all the problems. The Lord says, 'Not by might not by power, but by my Spirit'. 'What are you, O mighty mountain? You will become level ground' (Zech.4:6,7). What "mountains" do you face today? What are the things that seem to be impossible for you today? Is it sickness? Is it financial predicament? Is it problems at work? Is it a grief that you just can't bear any longer? Is your marriage or family falling apart? Do you struggle with anxiety so great you don't think you can make it through another day? Well, then hear this! NOTHING is impossible with God (Luke 1:37). He can make a way when there is no way (Is. 43:19). As He told Jeremiah, "I am the Lord, the God of all mankind. Is anything too hard for me?" (Jer.32:27). No mountain is too big for him to level (Is. 45:2 NIV). No sea is too great for him to part (Exo.14:21; Ps. 66:6). No problem is too difficult for Him to solve! Cheer up! Trust in Him. He will do a miracle for you!

**2. THERE IS NO <u>PROMISE</u> TOO HARD FOR GOD TO FULFIL.**

Our God is a promise keeping God (Joshua 23:14; 1Sam.3:19; 2 Chro.6:10, 15; Neh.9:8). The Bible says, 'God is not a man, that He should lie....Does he promise and not fulfill? (Num. 23:19). God promised Abraham and Sarah that He would give them a child when they were barren and when their bodies were as good as dead (Rom. 4:19, Heb. 11:12). And the Lord fulfilled his promise exactly as he had said (Gen. 21:1). The birth of Isaac signals that God is faithful and mighty in His promise. When the Israelites inherited the Promised Land as the Lord promised (Exo.3:8; 6:6-8), Joshua said to the people, 'You know with all your heart and soul that not one of all the good promises the Lord your God gave you has failed. Every promise has been fulfilled; not one has failed' (Joshua 23:14). God has the power to do what he has promised to you (Romans 4:21). God's delays are not his denials (Hab. 2:3). He will surely fulfil his promises in your life (Luke 1:45).

**3. THERE IS NO <u>PRAYER</u> TOO HARD FOR GOD TO ANSWER.**

We serve a God who answers and sometimes over-answers prayers (John 14:14). The Lord declares, 'Call to me and I will answer you and tell you great and unsearchable things you do not know' (Jer.33:3). God did great and incredible things when the men of God prayed. When Abraham prayed, God healed the barrenness of Abimelech's household (Gen.20:17). When Joshua prayed, the sun stood still (Jos. 10:12). When

Elijah prayed, the fire fell from heaven (I Kings 18:36-38). When Peter prayed, dead woman came to life (Acts.9:40). We can never pray a prayer too difficult for Him to answer. There is no tear which prayer cannot wipe away or dry up. There is no despair which it cannot dispel. E.M. Bounds says, `God is pledged that if we ask, we shall receive. God can withhold nothing from faith and prayer.' When we go to God with pure and believing heart and ask anything according to His will, He has assured us His answers for all our prayers (I John 3:21,22; 5:14). The prayer of a righteous man is effective and powerful (James 5:16). Your miracle is just a prayer away!

**4. THERE IS NO PERSON TOO HARD FOR GOD TO SAVE.**

The Bible says, "Surely the arm of the Lord is not too short to save". (Isaiah. 59:1; 50:2; Num.11:23). There is no person too hard for God to save. No one is incorrigible or irredeemable in the sight of God. Everyday God transforms the lives of hundreds of people all over the world. Addicts, dacoits, murderers, rebels, robbers and the debauched are all being transformed by the saving power of the blood of Jesus. He will do the same in the lives of your friends and family members if you continue to pray from them (Mark 10:26, 27). You may be praying for someone who has not come to repentance yet. Continue to pray. God who changed the life of Zacchaeus, Paul, Lydia will change their lives also (Luke 10:9: Acts 9:1-6; 16:14, 15).

## THE DAILY NEEDS OF ISRAEL IN THE WILDERNESS

The 40-year wilderness wandering by Moses and the Israelites must be one of the biggest miracles in the Bible. Yet we take it for granted. Think about the metrics of their dire situation.

**FOOD :** God's people had to be fed daily. Feeding 2.5 to 3 million people and large flocks and herds of animals would require a lot of food. According to the quartermaster general in the army, it is reported that Moses would have to have 1,500 tons (15 lakh kgs) of food each days. It would take two freight trains, each a mile long, to feed that many people, every day.

**COOKING :** They would also need firewood to cook the food. This would take 4000 tons (40 lakh kgs) of wood and a few more freight trains, each a mile long, just for one day.

**WATER :** A person's water requirements would have been 19 litres per day. Therefore, it is thought that the Israelites would have needed up to 11,000,000 gallons of water (4.16 crore litres) each day just to drink, wash themselves and clean dishes etc. This would be the equivalent of a freight train of tank cars, 1800 miles long just to bring water. They had no lakes, and only a few wells. How did they that much water in a land where water is scarce? God provided their need.

**SPACE :** The children of Israel crossed the Red Sea in just one night. If they went on a narrow part, double file the line would be 800 miles long. And it would take 35 days and nights to get through. So, there had to be a space in the Red Sea, 3miles wide so that they could walk 5,000 abreast to get over in one night.

But then another problem; each time they camped at the end of the day, a campground of 750 square miles long was required. Think of it! This space just for night camping.

Do you think Moses figured all this out before he left Egypt?

I think not! You see, Moses believed in God. God took care of these things for Him. God will take care of you also.

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue :* **CITY REVIVAL AG CHURCH**

**Monday - Friday at 3.30 p.m to 6.30 p.m**
**Thursday at 10.30 a.m to 1.00 p.m**

**Contact : 98438 51115**



# ஆண்கள் ஐக்கியம்
## Men's Fellowship

**ஒவ்வொரு மாதமும் 3-வது திங்கட்கிழமை மாலை 6.30 மணி**

ஆண்கள் அனைவரும் பங்குபெறுங்கள்.

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்
## LADIES REVIVAL PRAYER

**வியாழன் தோறும்**
**காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை**



# வாலிபர் ஐக்கிய கூடுகை
## Youth Fellowship



*முதல் மற்றும் மூன்றாம் ஞாயிறு*
*மாலை 4.30 மணி*

வாலிப சகாதர, சகோதரிகள் அனைவரும் பங்குபெறுங்கள்.

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை*
*கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : City Revival AG Church | A/c Name | : City Revival AG Church |
| A/c Number | : 35354599169 | A/c Number | : 1196172000007824 |
| Bank Name | : STATE BANK OF INDIA | Bank Name | : KARUR VYSYA BANK |
| IFSC Code | : SBIN0000930 | IFSC Code | : KVBL0001196 |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st & 3rd Sunday-5.00 pm | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Youth Fellowship | 1st & 3rd Sunday<br>முதல் மற்றும்<br>மூன்றாம் ஞாயிறு<br>5.00 pm - 6.30 pm | வாலிபர் கூடுகை |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

# PRAISE & WORSHIP SERVICES

## EVERY SUNDAY

**Tamil Service - 7.00 a.m,**
**11.00 a.m**
**English Service - 9.00 a.m**
**Evening Service - 6.30 p.m**

## ஞாயிறு தோறும்

**தமிழ் ஆராதனை 7.00 மணி,**
**11.00 மணி**
**ஆங்கில ஆராதனை 9.00 மணி**
**மாலை ஆராதனை 6.30 மணி**

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

***Come with your friends & family & Receive the blessings of God***



**Sunday School is conducted for kids below 14 years**






**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org